செய்தி வெளியீடு எண்: 600 நாள் : 08.11.2013

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

(கலை பண்பாட்டுத் துறை)
பொன்னி, 31, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை–600 028
தொலைபேசி (ம) தொலையச்சு – 044 – 24937471

## நாட்டிய–நாடக விழா

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழகக் கலைகளின் மேம்பாட்டு வளர்ச்சிக்கும், கலைஞர்களின் நலவாழ்விற்கும் பல்வேறு அரிய கலைத் திட்டங்களை உருவாக்கிச் சிறப்புடன் செயற்படுத்தி வருகின்றது. அவற்றுள் தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்களை உருவாக்கி மேடையேற்றம் செய்யும் நாட்டிய நிறுவனங்களுக்கு நல்கை வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

இத்திட்டத்தின்கீழ், மன்றத்தின் நல்கையில் தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் நாட்டிய நாடகங்கள் **11.11.2013 மற்றும் 13.11.2013 ஆகிய நாட்களில் மாலை 6.00 மணியளவில்,** சென்னை, **மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் கலையரங்கில்** சிறப்பாக மேடையேற்றம் செய்யப்பட உள்ளது.

| | | |
|---|---|---|
| 11.11.2013 | கலைமாமணி திருமதி **சூர்யா சந்தானம்** வழங்கும் **பரத கலாலயாவின்** | **ஔவையார்** |
| 13.11.2013 | யுவ கலா பாரதி திருமதி **லட்சுமி ராமசாமி** வழங்கும் **ஸ்ரீ முத்ராலயாவின்** | **சப்த விடங்கம்** |

இந்நாட்டிய நாடக விழா இரண்டு நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை, மன்றத் தலைவர் தேனிசைத் தென்றல் திரு.**தேவா** அவர்களும், உறுப்பினர்–செயலாளர் குமாரி **பி.எஸ்.சச்சு** அவர்களும் செய்து வருகின்றார்கள். இந்நிகழ்வினை பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்க இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்.

**தேவா**
தலைவர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**